**இலங்கை போக்குவரத்துச் சபையம் - 2018**

---

இலங்கை போக்குவரத்துச் சபையின் 2018 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் நிதி சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றததிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில்லாத காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி மற்றும் 2005 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ/27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

---

| சட்டங்கள், விதிகள்/ பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபை சட்டம் 9(1) மற்றும் (2) ஆம் பிரிவு | சபையின் செயற்பாடுகளுக்காக கடன் தொகையொன்று பெற்றுக்கொள்ளும் போது நிதி அமைச்சரிடம் விசாரித்து உரிய அமைச்சரின் இணக்கப்பாட்டின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையினால் பேரூந்துக்களின் தவணைக் கொடுப்பனவிற்காக 2018 திசெம்பர் 24 ஆந் திகதி பெற்றுக்கொண்ட ரூபா 150,000,000 ஆன வங்கி கடன் தொகைக்கு அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 757 | 2018 ஆம் ஆண்டின் பொருட் மெய்மையாய்வு அறிக்கை 2011 நவம்பர் 01 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 381 | உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு ஆரம்பிக்கும் போது திறைசேரியிடம் விண்ணப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையினால் 18 வங்கிக் கணக்குகள் செயற்படுத்தப்பட்டிருந்தன. |

(இ) 2009 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

8.3.9 ஆம் பிரிவு

(i) உரிய வரிசை அமைச்சு அல்லது ஏனைய அரச நிறுவனமொன்றுக்காக பொது முயற்சியினால் செலவினத்தை மேற்கொள்ளல் அல்லது அவர்களிடமுள்ள மனித வளங்கள் உட்பட ஏனைய வளங்களை ஈடுபடுத்தக்கூடாத போதும் சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் இலங்கை தேசிய ஊழியர் சங்கம், மற்றும் தேசிய ஊழியர் சங்கம் என்பவற்றிற்கு மாதாந்தம் 160 லீற்றர் வீதம் டீசல் வழங்கி வழங்கப்பட்டிருந்தன.

(ii) அவ்வாறே சாரதிகள் எட்டு பேர் போக்குவரத்து அமைச்சு மற்றும் பிரதி அமைச்சர் அலுவலகத்திற்கு சம்பள மீள் அளிப்பதற்கு உட்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 2.3 கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்தல்

2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துவ சபை சட்டத்தின் பிரகாரம் சபையின் அதிகாரங்களை செயற்படுத்தக்கூடிய கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

i. சபையினால் போக்குவரத்து செய்யப்படும் பயணிகளுக்காக பேரூந்து நிறுத்துமிடங்களில் மேவுகைகளை அமைத்தல்.

ii. நடைமுறைச் சாத்தியமானதல்லாத அல்லது கஷ்டப் பிரதேசங்களாக கருதப்படும் வீதிகளில் பேருந்து சேவைகளை வழங்குதல்.

iii. சபைக்குரிய பேருந்துகளுக்கு நிறுத்துமிடங்களை அமைத்தல் மற்றும் பராமரித்தல்

## 2.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(i) சபையின் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்ட ரூபா 6,649,020 பெறுமதியான உதிரிப்பாகங்களை சபையின் உதிரிப்பாகங்கள் பரிசோதனைக் குழுவினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் குறித்த விவரக் குறிப்புக்கள் மற்றும் கிடைக்காமையால் நிராகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த

உதிரிப்பாகங்கள் உரிய நிறுவனத்திற்கு அனுப்பாமல் இரண்டு காலமாக 2019 யூன் மாதம் வரையிலும் களஞ்சியத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த உதிரிப்பாகங்கள் பயன்படுத்தக் கூட முடியாத வகையில் சிதைவடைந்திருந்ததுடன் அதன் காரணமாக களஞ்சியத்தில் இடப்பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது.

(ii) திணைக்களத்தின் பெறுகை குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கம்பனியொன்று இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப்பாகங்களிலிருந்து ரூபா 5,830,500 ஆன பெறுமதியான 13 பகுதிகள் விவரக் குறிப்புக்களுடன் இணங்காமை காரணமாக 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி குறித்த கம்பனிக்கு மீள ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நிராகரிக்கப்பட்ட பொருட்களுக்கான கட்டவளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் விவரக் குறிப்புக்கள் மற்றும் இணங்காமை அடிப்படையில் நிராகரிக்கப்பட்ட வழங்குனரிடமிருந்து மீண்டும் அப்பெறுமதியுடன் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) சபை சொந்தமான 114 டிப்போக்கள், 19 சாரதி பயிற்சி பாடசாலைகள் மற்றும் 12 பிராந்திய வேலைத்தளங்கள் இலங்கை பூராகவும் பேணிச் செல்லப்பட்டு வருவதுடன் அவை சபையினால் கையேற்கப்பட்ட அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட காணிகளில் நடாத்திச் செல்லப்படுகின்றன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் கணக்காய்வு திகதி வரையிலும், சபைக்குச் சொந்தமான காணிகளின் அளவு, பெறுமதி மற்றும் உரித்தையும் உறுதிப்படுத்த முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) சபையினால் 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரை ஒரு மாதம் முதல் இரண்டு வருடங்கள் வரையான காலப்பகுதியில் பதில் வழங்கப்படாத கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை 35 ஆக இருந்தது.

**2.5 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

---

(I) 2017 ஆம் ஆண்டின் போது 7302 பேரூந்துக்கள் சபையிடம் காணப்பட்ட போதும், 2018 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான பேரூந்துக்கள் 6492 ஆக இருந்தது. அதன் சதவீதமாக 5 சதவீதத்தினால் குறைவொன்றாகும். 2018 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சொந்தமாக நட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய பேரூந்துக்களின் எண்ணிக்கை 5575 ஆக இருந்ததுடன் அதில் நாளொன்றில் 5151 பேரூந்துகள் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டிருந்தன. நேர அட்டவணை தேவைப்பாட்டுடன் உடைய சாதாரண பேரூந்துக்களின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டின் போது 6465 ஆக இருந்த போதும் ஓட்டத்திற்காக 5575 பேரூந்துகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான பேரூந்துக்களின் எண்ணிக்கையில் 20 சதவீதம் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் நாளொன்றிற்கு ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியுமான பேரூந்துக்களின் எண்ணிக்கையில் 7 சதவீதம் அளவு சாரதிகள், நடத்துனர் பற்றாக்குறை, தொழில்நுட்ப கோளாறு போன்ற காரணங்களின் பேரில் ஓட்டத்தில் ஈடுபடுத்தாத நிலைமையொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(II) ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முழுமையான திருத்தம் செய்யப்பட வேண்டிய பேரூந்துகள் மற்றும் நாளாந்தம் ஏற்படும் சிறு திருத்தங்கள் காரணமாக ஓட்டத்தில் இருந்து அகற்றிய பேரூந்துகள் திருத்தம் செய்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவது சபையின் நோக்கமாக இருந்த போதும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உள்ளவாறு மொத்த பேரூந்து காணி 6942 ஆக இருந்த போதும், வெவ்வேறு காரணங்களின் பேரில் 890 பேரூந்துகள் அதாவது 13 சதவீதம் அளவில் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டது.

## 2.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

(i) 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது கம்பஹா பிரதேச களஞ்சியத்தில் பாவனைக்கு எடுக்காமல் ரூபா 1,851,227 தொகை பேரூந்து உதிரிப்பாகங்கள் 2005 ஆம் ஆண்டு முதல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் கொள்வனவு செய்யப்படாமை காரணமாக இந்நிலைமை ஏற்பட்டிருந்தது.

(ii) 2018 சனவரி 12 ஆந் திகதி ரூபா 5,689,717 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட வேர்டல் போரிப்ன் மிலிங்க் இயந்திரமொன்றும் 2018 ஆகஸ்ட் 16 ஆந் திகதி ரூபா 3,136,285 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட சிலின்டர் லைன் போரிங் இயந்திரமும் கொள்வனவு செய்த திகதி முதல் கணக்காய்வு திகதியாக 2019 செப்தெம்பர் 10 வரை உபகரணங்கள் (tools) இல்லாமை காரணமாகவும் என்ஜினை வெட்டும்போது அளவீட்டு தவறுகள் காணப்பட்ட காரணத்தினால் குருணாகல் பிராந்திய வேலைத்தளத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

(iii) மத்திய பஸ் தரிப்பிட அலுவலகத்தில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் பாவனைக்கு எடுக்கப்பாடத ரூபா 117,978 பெறுமதியான 27 பொருட்கள் இரந்தமை அவதானிக்கப்பட்டன. இவற்றை டாட்டா பஸ்களுக்காக பயன்படுத்த முடியுமாக இருந்த போதும் அவை குறித்த டிப்போக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

## 2.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் 9 மாகாணங்களில் 09 வாகன புகை பரிசோதனை நிலையங்களை நிர்மாணிப்பதற்குரிய உபகரண தொகுதிகள் 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புகை பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பொறுப்பேற்றிருந்தமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந் நிலையத்தின் நிர்மாணம் தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளல், கிரய நலன் பகுப்பாய்வு அல்லது எவ்வித ஆய்வொன்றும் இல்லாமல் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) இந்த புகை பரிசோதனைக்கு நிலையங்களுக்கு இடையே குருணாகல், மதவாச்சி நிலையங்கள் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், சட்டரீதியான சிக்கல்களினால் செயற்பாடற்றுக் காணப்பட்டன. அதன் பிரகாரம், அதிலிருந்து எதிர்பார்த்த செயலாற்றலை சபையினால் அடைந்து கொள்ளப்படாதிருந்தமையால் ரூபா 18.75 மில்லியன் பெறுமதியான இந்த இயந்திரங்கள் பொறிகள் விளைவற்றுக் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டதுடன் இச்சொத்துக்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் சிவில் வேலைகளின் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கான மதிப்பிடப்பட்ட ரூபா 89.84 மில்லியனில் ரூபா 22.48 மில்லியன் தொகை கணக்காய்வு திகதியான 2019 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) வாகன புகை பரிசோதனை இயந்திரங்கள் பொருத்தப்பட்டு சான்றிதழ் வழங்கல் மற்றும் வழங்கிய சான்றிதழ் தொடர்பான தரவுகள் வாகன புகை பரிசோதனை நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்ப வேண்டியதுடன் அதற்காக இணையத்தள வசதிகள் தேவையாகும். இதற்காக ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திடமிருந்து இணையத்தள வசதிகளைப் பெற்று அதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 164,280 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டதுடன் அதன் நன்மைகளும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

**(உ) பெறுகை முகாமைத்துவம்**

---------------------------------------------------------

(i) பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், 4.2.1(ஆ) பிரிவின் பிரகாரம் குறைந்தது 3 ஆண்டுகள் காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கை பிரதான பெறுகைத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டிய போதும் சமர்ப்பிக்கப்பட்ட பிரதான பெறுகை திட்டம் அதற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் பேரூந்துக்களை திருத்தம் செய்வதற்காக தேவையான (Crank Shaft) உடன் பெயரின் (Bearing) கொள்வனவு தொடர்பாக தனியார் கம்பனியொன்றுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 2018 மே 14 ஆந் திகதி முடியடைந்திருந்தமையால் சபையின் யட்டிநுவர மற்றும் குருணாகல் பிராந்திய வேலைத்தளங்களுக்கு 2 மாதங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு தலைவர் அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

அதன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளாமல் பெறுகை குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பீட்டு விலை முறைமை அடிப்படையில் தனியார் கம்பனியொன்றிடமிருந்து ரூபா 46,000 வீதமான விலைகளின் கீழ் ரூபா 1,196,000 பெறுமதியான 26 மற்றும் பெயரிங் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) இலங்கை போக்குவரத்து சபையின் 2018 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 139 கணனிகள் மற்றும் 74 மடிக் கணனிகள் ரூபா 15,290,000 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கொள்வனவு செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் 800 கணனிகளையும் 47 மடிக் கணனிகளையும் ரூபா 113,303,750 தொகைக்கு பெறுகை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கணனி கொள்வனவின் போது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட ரூபா 89,977,500 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தேவைப்பாட்டினை இனங்காணாமல் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(iv) சபையினால் 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி ரூபா 75,900,000 பெறுமதியான 200 டிக்கட் மெஷின்கள் கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதன்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் இலத்திரனியல் 1000 பேரூந்து டிக்கட் மெஷின்கள் ரூபா 35 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக 2018 பெப்ரவரி 19 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2018 ஆம் ஆண்டில் ரூபா 75,900,000 பெறுமதியான 2000 டிக்கட் மெஷின்களை கொள்வனவு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதில் அங்கீகாரம் இன்றி கொள்வனவு செய்யப்பட்ட 1000 டிக்கட் மெஷின்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த டிக்கட் மெஷின் கொள்வனவு செய்வதற்கு முன்னர் டிப்போக்களுக்காக தேவையான மெஷின்களின் அளவு கணக்கிடப்பட்டு இனங்காணப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

- அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6 பிரிவின் பிரகாரம் விவரக்குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், சபை தற்போது பயன்படுத்தும் டிக்கட் மெஷின்கள் பிரயோகம் (application) இற்கு இணங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையில் தற்போது

பயன்படுத்தப்படும் டிக்கட் மெஷின் வழங்குனர்கள் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொண்ட ஏனைய நிறுவனங்கள் கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் பெறுகை செயற்பாடு வெளிப்படையொன்று இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 7.12 பிரிவின் பிரகாரம் போட்டி என தெளிவாக இனங்காணப்படாத போது அதன் பிரகாரம் கிடைத்த சகல கேள்விகளை நிராகரிக்க முடியுமாக இருப்பதுடன் விரிவான விளம்பரமொன்று மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் சந்தை பெறுமதி பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் கூறுவிலை நியாயமானதெனின் கேள்வி கோரும் செயற்பாடு செல்லுபடியானதென கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அவ்வாறு கூறுவிலை மதிப்பீடொன்று இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட விபரக்குறிப்புக்கள் மற்றும் இணக்கத்தில் அடிப்படையில் தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெறுமதி சேர் வரியுடன் ரூபா 37,950 இற்கு 2,000 டிக்கட் மெஷின்கள் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி கூடிய பெறுகை குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்துடன் இணங்கியிருக்கவில்லை.

- நிதிப்பிரமாணம் 237(ஆ) பிரகாரம் களஞ்சிய வழங்கலுக்காக கொடுப்பனவு செய்யும் போது பொருட்கள் இருக்க வேண்டிய போதும் அதற்கு முரணாக டிக்கட் மெஷின் கொள்வனவின் போது 35 சதவீதமான தொகை பொருட்கள் கிடைப்பதற்கு முன்னர் செலுத்த வேண்டுமென உடன்படிக்கையின் நிபந்தனையொன்றாக குறிப்பிட்டு 2018 நவம்பர் 22 ஆந் திகதி பெறுமதி 30 சதவீதமான தொகை அதாவது ரூபா 2,277,000 தொகை மெஷின்கள் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் 2018 மே 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் பெறுகைக்காக 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி உடன்படிக்கை செய்து 02 மாதங்களுக்குள் பொருட்களை வழங்குவதற்காக இணங்கப்பட்டிருந்தது. எனினும், பொருட்கள் 2019 பெப்ரவரி 12 ஆந் திகதியே கிடைத்து இருந்ததுடன் பெறுகை செயற்பாடுகள் 06 மாதங்கள் தாமதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு பொருட்கள் பெறுவனவு தாமத காலம் 02 மாதங்களாக இருந்த போதும் கால தாமதம் தொடர்பாக உடன்படிக்கையின் 04 ஆந் திகதி நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- இந்த டிக்கட் இயந்திரங்களின் சாவி பலகை வெளிச்சமின்மை, டிக்கட் வழங்கலின் போது மெதுவாக இருத்தல், பட்டறியின் ஆயுட்காலம் மிகவும் குறுகியதாக இருத்தல் மற்றும் டிக்கட் ரோல் தயார்ப்படுத்தல் பொத்தான் இல்லாமை போன்ற காரணங்களினால் கணக்காய்வின் போது பரீட்சிக்கப்பட்ட 10 டிப்போக்களில் 03 டிப்போக்களுக்கு கிடைத்த புதிய டிக்கட் இயந்திரங்கள் அனைத்தும் அதாவது 55 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையில் 125 சொகுசு ரக பேரூந்துக்காக ஜீபீஎஸ் (GPS) முறைமையை பேணிச் செல்வதற்காக தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக சபை தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 33,628,840 இற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் தகவல்கள் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகாமையாளரால் இச்செயற்திட்டத்தின் தேவைப்பாடு இனங் காணப்பட்டிருந்ததுடன் சொகுசு பேரூந்துக்களில் இடம்பெறும் மோசடி மற்றும் முறைகேடுகள் அதற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இச்செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னர் ஆரம்ப சாத்தியவள ஆய்வொன்றும், கிரய நலன் பகுப்பாய்வொன்றும் பெறுபேறு எதிர்வு கூறல் முறைமை தொடர்பான ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த கெமஹா முறைமை மற்றும் ஜீபீஎஸ் முறைமை என்பவற்றை மேற்பார்வை செய்வதற்கான தலைமை அலுவலகத்தின் மேற்பார்வையோ டிப்போ உத்தியோகத்தர்களையோ ஈடுபடுத்தாமல் இருந்ததுடன் இச்செயற்திட்டத்தின் மூலம் டிக்கட் மெஷின் வருமானம், எரிபொருள் தாங்கியின் எரிபொருள் அளவு, குறித்த நேர அட்டவணையின் பிரகாரம், உரிய வீதியில் எந்தளவு பயணிகள் எண்ணிக்கையுடன் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை போன்ற விடயங்களை பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும், அப்பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) 125 சொகுசு ரக பேரூந்துக்காக கமெறா மற்றும் உப பாகங்கள் 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், சபைக்கு சொந்தமான 112 பேரூந்துக்கள் மாத்திரமாக இருந்தன. கணக்காய்வு திகதியான 2019 ஏப்ரல் 27 ஆந் திகதி வரை ரூபா 7,263,830 பெறுமதி 27 கெமறா உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(iv) குறித்த உடன்படிக்கை நிறுவனம் 2019 மே 10 ஆந் திகதி வரையில் சேவைதாரர் கணனி (Server) வழங்கல் மற்றும் ஸ்தாபித்தல் தொழில்நுட்ப விபரக்கு குறிப்புக்கள் மற்றும் ஒட்டுமொத்த முறைமையை பரீட்சிப்பதற்காகவும் சபையின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்கி முழு முறைமையையும் சட்டரீதியான கையளிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(v) சபையில் 125 சொகுசு ரக பேரூந்துக்காக ஜீபீஎஸ் (GPS) முறைமையை மென்பொருள் மற்றும் உப பாகங்களை பொருத்தும் போது உரிய பெறுகை உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 3,362,884 வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

### (அ) செயற்பாடும் மீளாய்வும்

2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டில் அடைந்து கொள்ள வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i நாளாந்த 6300 பேரூந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான 5201 பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அதாவது 1099 பேரூந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாமல் இருந்தது.

ii. நாளாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் அளவு சராசரியாக 1.5 மில்லியன் கிலோ மீற்றர்களாக பேணுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், உள்ளவாறான 1.2 மில்லியன் கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

iii. நாளொன்றுக்கு உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பதிவேடுகளுக்கு உட்படுத்திய வருமானம் ரூபா 91 மில்லியனாக இருந்த போதும், உள்ளவாறான கிடைத்த வருமானம் ரூபா 79.19 மில்லியனாக இருந்தது. அதாவது நாளொன்றிற்கு ரூபா 11.8 மில்லியன் வீதம் வருமான இலக்கை அடைந்து கொள்ள முடியாமல் இருந்தது.

iv. சிசுசெரிய பாடசாலை வண்டி சேவை 1000 பேரூந்துகள் வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், அதற்காக 746 பேரூந்துகள் மாத்திரம் சேவைக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே 250 கிராமிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதும் ஆண்டில் ஒரு சேவையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

v. 960 என்ஜின் தொகுதிகளை திருத்தம் செய்வதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 288 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் ரூபா 172.9 மில்லியன் செலவிடப்பட்டு 431 என்ஜின்கள் தொகுதிகள் மாத்திரம் திருத்தம் செய்யப்பட்டிருந்தன.

vi. சுகநலன் சேவைகள் முறைமை, இளைப்பாறும் அறை மற்றும் கராஜ் திருத்தங்களுக்காக ஊவா பிராந்தியத்திற்கு ரூபா 25.8 மில்லியன், நுவரெலியா பிராந்தியத்திற்கு ரூபா 28.4 மில்லியனும் ரஜரட்ட பிராந்தியத்திற்கு ரூபா 12.3 மில்லியனும் வழக்கு பிராந்தியத்திற்காக ரூபா 21.20 மில்லியனும் வட பிராந்தியத்திற்கு ரூபா 24.05 மில்லியனுமாக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், எவ்வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

vii. சபையினால் 7 டிப்போக்களினதும் பிராந்திய வேலைத்தளமொன்றின் வீதிக்கும் காபட் இடுவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 46,163,597 பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதும் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை செயற்பாட்டினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) ஸ்ரீ லங்கமவின் டிப்போக்களின் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- **மஹரகம டிப்போ**

I மஹரகம டிபோவில் 2018 திசெம்பர் வரை பேருந்து அணி 101 ஆக இருந்ததுடன் சாரதிகள் நடாத்துனர் இல்லாமை, மற்றும் தொழில்நுட்ப காரணங்களின் பேரில் அதில் 25 பேரூந்துகள் அதாவது 25 சதவீதம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பேருந்து அணியின் 56 பேரூந்துகள் அதாவது 55 சதவீதம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பேரூந்துகளாக காணப்பட்டன.

II மஹரகம டிபோ 2008 திசெம்பர் மாதத்தின் இறுதி வாரத்தில் பேரூந்து அணியில் ஓட்டத்திற்கு வழங்கப்பட்ட பேருந்துகள் தொடர்பான பரிசோதனையின் போது சாரதிகள், நடாத்துனர்கள் இல்லாமை காரணமாக அவ்வாரத்தில் சராசரியாக ஒரு நாளில் 17 பேரூந்துகள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்தமை

அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டிய 7,471,550 கிலோ மீற்றர்களில் ஆவணங்களிலுள்ள 1,192,272 கிலோமீற்றர் அளவு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் இருந்ததுடன் போக்குவரத்து சேவை சமூக பொறுப்பொன்றாக கருதி பிராந்திய வீதிகளில் பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமையால் பயணிகளுக்கான அவதி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான தாக்கம் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

- **தலங்கம டிப்போ**

டிப்போ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பயன்படுத்தப்படும் ‘‘எரிபொருள் மற்றும் எரிபொருள் நிரப்பும் பத்திரம்’’ கோடு 06 இன் பிரகாரம் மற்றும் அமிழ் கோது அளவின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனையின் போது பாரியளவு விலகலொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ்விலகல் தலங்கம டிப்போவில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆண்டில் 22 லீற்றர் முதல் 3392 லீற்றர் வரையான வீச்சில் காணப்பட்டது.

- **கடவத்த டிப்போ**

கடவத்த டிப்போவிற்கு சொந்தமான இலக்கம் 01 மற்றும் 2 என இரண்டு எரிபொருள் பம்பிகள் காணப்பட்டதுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து வழங்கப்பட்ட 02 ஆம் இலக்க பம்பி 2018 மே 15 ஆந் திகதி முதல் கணக்காய்வு திகதியான 2018 நவம்பர் 16 வரை செயற்பாடற்று இருந்தது. இப்பம்பி உதிரிப்பாகங்கள் இல்லாமை காரணமாக இப்போதும் செயலற்றுக் காணப்பட்டது.

- **மொறட்டுவ டிப்போ**

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் ஊழியர் ஒருவர் ஓய்வுபெற்று ஒரு மாதத்திற்குள் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், டிப்போவின் 2004 முதல் 2018 சனவரி மாதம் ஓய்வுபெற்ற 32 ஊழியர்களுக்கான பணிக்கொடை 16,762,882 தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்தது.

- **அவிஸ்ஸாவெல டிப்போ**

(i) 2018 ஆம் ஆண்டில் டிப்போ திருத்த வேலை தொடர்பான பரிசோதனையின் போது ரூபா 7,500 இற்கு மேற்பட்ட திருத்த வேலைகளுக்காக ஆண்டின் போது ரூபா 20,975,596 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே திருத்த வேலைகள் மேற்கொள்ளும் போது சில சந்தர்ப்பங்களில் 11 நாட்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் அப்பேரூந்தினை ஓட்டத்திற்கு வழங்குவது தாமதமானமை காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது இழக்கப்பட்ட வருமானம் ரூபா 31,852,916 ஆக இருந்தது.

(ii) டிப்போவினால் பேரூந்து ஓட்டத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட வீதிகளில் பதிவேடுகளுக்குட்பட்ட கிலோமீற்றர் அளவு 11,998,401 ஆக இருந்த போதும், அதில் 6,977,452 ஆன கிலோமீற்றர் அளவொன்றாகும். இதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது டிப்போவினால் வீதி பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்ட கிலோமீற்றர் 5,020,949 ஓட்டத்தில் ஈபடுத்தப்பட்டிருக்கவில்லை.

- **பாணந்துறை டிப்போ**

பாணந்துறை டிப்போவில் மலசலகூட முறைமையொன்றை நிர்மாணிப்பதற்காக விலை கோரப்பட்டு 2018 யூலை 05 ஆந் திகதி ரூபா 939,035 தொகைக்கு தனியார் கம்பனியொன்று மூலம் நிறைவேற்றுவதற்கு கேள்வி சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வு திகதியான 2019 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரை அச்செயற்பாட்டை நிறைவேற்ற முடியாமல் இருந்தது.

**(ஈ) மனிதவள முகாமைத்துவம்**

---

i 2017 மார்ச் 17 ஆந் திகதிய எம்ஈ/02/01/01/33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் சபைக்காக 24,886 ஆன பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் உள்ளவாறான பதவியணியினர் 30,161 ஆக இருந்தமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்த ஊழியர்களின் எண்ணிக்கை 5275 ஆக இருந்தது. இம்மிகை பதவியணியினருக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii. நல்லாளுகை தொடர்பான வழிகாட்டல் கோவையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பொது முயற்சிக்காகவும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை அந்நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பொன்று இல்லாமல் ஆட்சேர்ப்பு நடைமுறை இன்றி 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஒட்டுமொத்த உத்தியோகத்தர் / பதவியணியினர் எண்ணிக்கை 30161 ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

**(உ) சுற்றாடல் சிக்கல்கள்**

---

டிப்போ வளவில் உள்ள பிரிவுகளில் எண்ணெய் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக ஏற்றுக்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்று பின்பற்ற வேண்டியிருந்ததுடன் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலமும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரமும் அதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் சபையின் 107 டிப்போக்களில் 09 டிப்போக்கள் மாத்திரமே இவ்வனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்தன. அதாவது 98 டிப்போக்களில் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.